## ஒருபோதும் மறையாது: மறுபடியும் உதிக்கும்

# சூரியன் ஒளியில் தமிழ்நாடு மீண்டும் செழிக்கும்!

## பூண்டி கலைவாணன் இல்லை மணவிழாவில்
## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

தஞ்சாவூர்,மே 20 -

**பூண்டி கலைவாணன் இல்ல மணவிழாவில் கழக இளைஞரணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகையில், சூரியன் ஒருபோதும் மறையாது; மறுபடியும் உதிக்கும்; அந்த சூரியனின் ஒளியில் தமிழ்நாடு மீண்டும் செழிக்கும் என்று குறிப்பிட்டார்.**

திருவாரூர் மாவட்டக் கழகத் தூணாக விளங்கி, கழகத்தினர் நெஞ்சங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் பூண்டி கே. கலைச்செல்வம் - மல்லிகா ஆகியோரின் மகள் மருத்துவர் க.கலையழகி - மருத்துவர் ந.ராம் பாலாஜி இணையேற்பு விழா தஞ்சாவூரில் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டா லின் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்.

அவர் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு: -




இன்றைக்கு நம் கழகத் தலைவரின் தலைமையில், திருவாரூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் முகமாக இருக்கக்கூடிய நம் அண்ணன் பூண்டி கலைவாணன் அவருடைய இல்லத் திருமண விழாவில், உங்களோடு கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அதற்கு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தேர்தல் முடிவுகள் எல்லாம் வந்த பிறகு, நம் தலைவர் அவர்கள் கலந்துகொள்கின்ற முதல் பொது நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சி.

மாவீரர், மறைந்த அண்ணன் பூண்டி கலைச்செல்வன் அவர்களின் அன்பு மகள், மருத்துவர் கலையழகி - மருத்துவர் ராம் பாலாஜி இணையரின் இந்தத் திருமண நிகழ்ச்சி, இன்றைக்கு ஒரு சாதாரண திருமண நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல், நம் கழகத்தின் நிகழ்ச்சியாக மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மணமகள் திருவாரூர் மாவட்டம், மணமகன் திருச்சி மாவட்டம், திருமணம் நடைபெறுகின்ற இந்த இடம் தஞ்சாவூர் மாவட்டம். மொத்தத்தில் ஒட்டுமொத்த டெல்டா மாவட்டமும் சேர்ந்து ஒரு கூட்டணி அமைத்து, இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. யார் எந்தப் பக்கம் போனாலும், எந்த மாவட்டம் எந்த முடிவு எடுத்தாலும், டெல்டா எப்போதுமே திராவிட முன்னேற்றக் கழகம் பக்கம்தான் என்பதை நிரூபித்துக் காட்டிய உங்கள் அத்தனைபேருக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### முத்தமிழறிஞர் கலைஞர்!

திருவாரூர் மாவட்டத்தில், நம் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்வதற்கு உறுதியான அடித்தளத்தைப் போட்டவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அவரை நீங்கள் என்றைக்கும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். திருவாரூர் மாவட்டம் மட்டும் இல்லை, ஒட்டு மொத்த டெல்டாவுமே என்றைக்குமே கழகத்தின் கோட்டையாகத்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது.

கழகத்தின் வரலாற்றில், அதுவும் குறிப்பாக இந்த டெல்டா பகுதியின் அரசியல் வரலாற்றில், பூண்டி கலைச்செல்வம் அவர்களின் பெயர் என்றைக்குமே நிலைத்து நிற்கும்.

இன்றைக்கு அண்ணன் கலைச்செல்வம் அவர்களின் வழியில், அவருடைய தம்பி, நம் அண்ணன் கலைவாணன் அவர்களும், அவருடைய மகன், தம்பி கலைவேந்தனும், அவர்களின் ஒட்டுமொத்தக் குடும்பமும் இன்றைக்கு கழகத்திற்காகக் களத்தில் இறங்கி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்தக் குடும்ப நிகழ்ச்சிக்கு வருகை தந்திருப்பதில், எனக்கு மிகுந்த பெருமை.

### கழகம் மீண்டும் வெற்றி!

தமிழ்நாடு முழுவதும், இது மாதிரியான லட்சக்கணக்கான கழகக் குடும்பங்கள் இருப்பதனால்தான் கழகம் எவ்வளவு பெரிய புயலைச் சந்தித்தாலும், நாம் திரும்பத் திரும்ப மீண்டும் எழுந்து வந்து கொண்டிருக்கிறோம்.

இந்தத் திருமணத்தில் இருக்கக் கூடிய எழுச்சியையும், உங்களின் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் பார்க்கும்போது நிச்சயம் நம் தலைவர், நிச்சயம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் வெற்றிவாகை சூடும் என்பதில், எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னமாதிரி, திராவிட முன்னேற்றக் கழகம் வெறும் அரசியல்இயக்கம் கிடையாது, வெறும் ஒரு கட்சி கிடையாது. அது ஒரு சமுதாயஇயக்கம். தேர்தலில் வெற்றி, தோல்வி என்பதெல்லாம் சகஜம். மற்றக் கட்சிகளைத்தான் அவையெல்லாம் பாதிக்கும். சமுதாயஇயக்கமான நம் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் போல மக்கள் பணிகளைத் தொடர்ந்து செய்துகொண்டுதான் இருக்கும், நாமும் அப்படித்தான் இருப்போம். நம் தலைவருடைய வழிகாட்டுதலின்படி, அதை நாங்கள் தொடர்ந்து செய்வோம்.

### களப்பணி - மக்கள் பணி

ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், தேர்தல் அரசியலில்தான் நாம் தோற்றிருக்கிறோமே தவிர, வெற்றிவாய்ப்பை இழந்திருக்கிறோமே தவிர, கொள்கைஅரசியலில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தோற்றது கிடையாது, தோற்கவும் மாட்டோம். எனவே, கழக உடன்பிறப்புகள், நாம் மீண்டும் எப்போதும் போல நம் களப்பணியை, மக்கள் பணியைத் தொடர்வோம். நம் தலைவர் எப்போதும் சொல்வது போல, ஆளுங்கட்சியாக இருந்த போது மட்டும் அல்லாமல், எதிர்க் கட்சியாக இருக்கும்போதும், நமக்கு வாக்களித்த மக்களுக்கு மட்டும் அல்லாமல், வாக்களிக்காமல் போன மக்களுக்கும் சேர்த்தே நாம் உழைப்போம்.

நாம் தமிழ்நாட்டுக்கு வருகின்ற ஆபத்துகளை எல்லாம் நிச்சயம் தடுத்து நிறுத்துவோம். மாநில உரிமைகளை நிச்சயம் காப்போம். இப்பொழுதே... இந்த 10 நாட்களிலேயே... மக்கள், பல பெண்கள், இளைஞர்கள், இன்றைய தலைமுறையினர் (ஜென்ஸி கிட்ஸ்), இந்த ஆட்சியின் உண்மையான முகத்தை உணர ஆரம்பித்துவிட்டார்கள். நாளாக நாளாக நிச்சயம் இந்த ஆட்சியாளர்கள், தாங்களாகவே நிறைய வெளிப்படுவார்கள் (எக்ஸ்போஸ் ஆவார்கள்). போகப் போக இன்னும் பலருக்குப் பல உண்மைகள் தெரிய வரும்.

### நிரந்தரமாக இருந்துவிடாது!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்ன ஒரு உதாரணத்தை, இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். தாயின் பாதுகாப்பில் இருக்கக்கூடிய ஒரு குழந்தை கிலுகிலுப்பை ஆட்டி விளையாட்டு காட்டுகின்ற ஒரு ஆளைப் பார்த்து நிச்சயம் மயங்கும், மகிழ்ச்சியடையும். தாயிடம் இருந்து தாவி, அந்தக் கிலுகிலுப்பு ஆட்டுபவனிடம் சென்று கொஞ்ச நேரம் அமர்ந்துகொள்ளும். ஆனால், அந்த குழந்தை கிலுகிலுப்பை காட்டுபவனிடம் நிரந்தரமாக இருந்துவிடாது. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அதற்கு உண்மையான பாசம் என்றால், என்னவென்று தெரியும். தாயின் முகத்தை நிச்சயம் தேடிப் பார்க்கும். தாயிடம்தான் மீண்டும் திரும்பி வரும். அது மாதிரி இப்போது கவர்ச்சி மாயாஜாலத்தைக் காட்டி மக்களைச் சிலர் ஈர்த்து இருக்கிறார்கள். இந்த கவர்ச்சி, மக்களின் கஷ்டத்தைப் போக்காது. அடிப்படைப் பணிகளை நிறைவேற்றாது. எந்தப் பிரச்சினைக்கும் அது தீர்வு காணாது. எனவே, தாயின் அன்புக்கு ஈடாக எதுவும் இல்லை என்பதை, அந்தக் குழந்தை மீண்டும் உணர்ந்து தமிழ்நாட்டுக்குத் தாயாக இருக்கக்கூடிய நம் கழகத்தை, நம் தலைவரை நோக்கி, நிச்சயம் அந்தக் குழந்தை விரைவில் வரும்.

நம் தலைவர் அவர்கள் சொன்னது போல, ``சூரியன் ஒருபோதும் மறையாது, அது மறுபடியும் உதிக்கும், அதன் ஒளியில் தமிழ்நாடு மீண்டும் செழிக்கும்'' என்று சொல்லி, மணமக்களுக்கு மீண்டும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, முத்தரசன், பழனிச்சாமி, கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா, பொன்முடி, எஸ்.டி.பி.ஐ-யின் மாநிலத் தலைவர் முபாரக், மாவட்டக் கழகச் செயலாளர்கள் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், ரகுபதி, துரை.சந்திரசேகரன், சா.சி.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சாக்கோட்டை அன்பழகன், பழனிவேல், நிவேதா முருகன், லட்சுமணன், முன்னாள் அமைச்சர்கள் பழனிமாணிக்கம், வைத்திலிங்கம், மதிவாணன், கோவி.செழியன், மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கே., முரசொலி, செல்வராஜ், கவிஞர் சல்மா, அருண் நேரு, மாநகரச் செயலாளர்கள் சண்.ராமநாதன், அன்பழகன், தமிழழகன், டி.கே. ஜி.நீலமேகம், அண்ணாதுரை, அசோக்குமார், மாரிமுத்து, முத்துராஜா, இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் இளையராஜா, இளைஞர் அணி அமைப்பாளர்கள் பனங்குடி குமார், முகில்வேந்தன், ஜி.கே.எம்.ராஜா, வாசிம் ராஜா, மருதமுத்து, ஒன்றியச் செயலாளர் பாலச்சந்தர், மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கலைவாணன், மல்லிகா, கலைவேந்தன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

## ஆ.மணி எம்.பி. தலைமையில்! தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

தருமபுரி, மே 20 -

தருமபுரி கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஜூன் 3 ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது, நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு செய்ய வரும் குழு வருகை, மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

கூட்டத்தில் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தருமச்செல்வன், அவைத்தலைவர் செல்வராஜ், நகர செயலாளர்கள் நாட்டான். மாது, எம்பி.கௌதம், முல்லை ரவி, மாநில நிர்வாகிகள் இரா.தாமரைச் செல்வன், செந்தில்குமார், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ஆறுமுகம். உமாசங்கர், ரேணுகா தேவி, அரூர் கழக வேட்பாளர் சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் டி.எல். காவேரி, ஏ.எஸ்.சண்முகம்,என்.பி.பெரியண்ணன், என்.செல்வராஜ், சந்திர மோகன், சௌந்தரராசு, ரத்தினவேல், செங்கண்ணன், வீரமணி, பச்சியப்பன், மல்லமுத்து, கருணாநிதி, கிருஷ்ணன், வேடம்மாள், வைகுந்தம், எச்சனஹள்ளி சண்முகம், கே.எஸ்.ஆர். சேட்டு, வீரமணி, சூர்யா தனபால்,பிரகாஷ், வ.முல்லை வேந்தன், சுருளிராஜன், ராஜா, வழக்கறிஞர் அசோக் குமார், கே.ஆர்.சி.செல்வ ராஜ், கலைச்செல்வன், ஹரிவிக்னேஷ், முரளி, உஷா ராஜேந்திரன், என். தேவராஜ், முத்துலக்ஷ்மி, ஐ.டி. விங் உதயசூரியன், ஜெ. ராஜேஷ், தமிழ ழகன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.




கடலூர் கிழக்கு மாவட்டம், குறஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் கூட்டம், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. பின்னர் கழக நிர்வாகிகளிடம் தனித்தனியாக கருத்துகள் கேட்டறியப்பட்டது. கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் டி.இசை, தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் கழக நிர்வாகிகள் கருத்துகளை கேட்டறிந்து கொண்டனர். மாவட்டக் கழகச் செயலாளர், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---



## தி.மு.க.
## இளைஞர் அணி

### மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்
### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 23.05.2026 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் துணைச் செயலாளர்கள் முன்னிலையில், **கழகத் தலைவர்** அவர்களின் சிறப்புரையுடன் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்**

- ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்
- கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-05-2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி